


கன்னியாகுமரி மாவட்டத்தின் 2017-2018-ம் ஆண்டிற்கான வளம் சார்ந்த முன்னுரிமை கடன் (ரூ. 7247.24 கோடி) திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட, நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு. ஜெ. மார்ட்டின் பிரகாசம் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (29.11.2016) நடைபெற்ற வங்கியாளர்கள் கூட்டத்தில் பெற்றுக்கொண்டார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.ஹெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 846/2016 நாள்: 29.11.2016

**கன்னியாகுமரி மாவட்டத்தின் 2017-2018-ம் ஆண்டிற்கான வளம் சார்ந்த முன்னுரிமை கடன் (ரூ. 7247.24 கோடி) திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (29.11.2016) வெளியிட்டார்.**

கன்னியாகுமரி மாவட்டத்தின் 2017-2018-ம் ஆண்டிற்கான வளம் சார்ந்த முன்னுரிமை கடன் (ரூ. 7247.24 கோடி) திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட, நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு. ஜெ. மார்ட்டின் பிரகாசம் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (29.11.2016) நடைபெற்ற வங்கியாளர்கள் கூட்டத்தில் பெற்றுக்கொண்டார்.

பின்னர் கூட்டத்திற்கு தலைமையேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்:-

கன்னியாகுமரி மாவட்டத்தின் 2017-18 ம் ஆண்டில் முன்னுரிமைக் கடனாக ரூ.7247.24 கோடி வழங்க வாய்ப்புள்ளதாக நபார்டு தயாரித்த வளம்சார்ந்த கடன் திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதில் குறுகிய கால பயிர்க்கடனாக ரூ.2970.25 கோடியும், வேளாண் தொழில் சார்ந்த காலக்கடனாக ரூ.946.10 கோடியும் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் ரிசர்வ் வங்கியின் புதிய முன்னுரிமை கடன் கொள்கையின்படி விவசாய உட்கட்டமைப்பு மற்றும் விவசாயம் சார்ந்த செயல்பாடுகளுக்கு, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஏற்றுமதி தொழில்களுக்கு, கல்விக்கடனுக்கு, புதிய வீடுகள் கட்டுவதற்கு, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு, சுயஉதவிக்குழுக்கள் மற்றும் கூட்டுப்பொறுப்புக்குழுக்களுக்கு கடனாக முறையே ரூ.633.42 கோடியும், ரூ.959.58 கோடியும், ரூ.455.00 கோடியும், ரூ.245.00 கோடியும், ரூ.344.80 கோடியும், ரூ.82.74 கோடியும், ரூ.559.95 கோடியும் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் நபார்டு வங்கியின் 2017-18-ம் ஆண்டிற்கான இந்த வளம்சார்ந்த கடன் திட்டமானது **"2022க்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்"** என்ற நோககத்தை உடையது. அதாவது, விவசாயிகளை கால்நடைவளர்ப்புடன், உள்நாட்டு மீன்வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற தொழில்களிலும், விவசாயம் சாரா தொழில்களிலும் ஈடுபடுத்தி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க செய்தல் வேண்டும் என்றும், பகுதி சார்ந்த திட்டங்களாக கன்னியாகுமரி மாவட்டத்தின் 4 ஒன்றியங்களில் "நாட்டு கோழி மற்றும் புறக்கடை கோழி" வளர்ப்பிற்காக 221.40 இலட்சங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறு குறு விவசாயிகளின் வருமானத்திற்கு உத்திரவாதம் கொடுக்கும், இந்த முக்கியமான செயல்பாடிற்காக மாவட்டத்தில் உள்ள சிறு குறு விவசாயிகளுக்கு கடன்வழங்க வேண்டும் என்றும், இவ்வளம்சார்ந்த கடன் திட்டமானது, துறை வாரியான உள்கட்டமைப்பு தேவைகளான, ஒவ்வொரு ஒன்றியத்திலும் சேமிப்புக்கிடங்குகளுடன் கூடிய பதப்படுத்தும் நிலையங்கள், குளங்களை தூர்வாரி, மறுசீரமைப்பு செய்தல், வாய்க்கால் வரத்துவாரிகள், குளக்கரைகள் ஆகியவற்றை பலப்படுத்துதல், போன்றவற்றை உள்ளடங்கியதாக உள்ளது.

மேலும் கன்னியாகுமாரி மாவட்டத்தில், 2016-17-ல் 2500 கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்கு கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே இத்திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள திட்டங்களை விரைவாக நிறைவேற்றி, வேளாண் மற்றும் அதனை சார்ந்த தொழில்களை மேம்படுத்த வேண்டுமென அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து, நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி அதிகாகரி திரு.ஜெ. மார்ட்டின் பிரகாசம் பேசுகையில், நபார்டு வங்கியானது ஒவ்வொரு ஆண்டும் இந்திய ரிசர்வ் வங்கியின் நெறியின்படி, விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்களை மேம்படுத்த மாவட்ட வாரியான வளம்சார்ந்த கடன் திட்ட அறிக்கையை 1989-ம் வருடம் முதல் தயாரித்து வருகிறது என்றார். மேலும், அவர் கூறுகையில், இந்திய அரசாங்கத்தின் பார்வையில், விவசாயம் என்பது 3 தூண்களின் மேல் நிலைநிறுத்தப்பட்டுள்ளது அதாவது, பாரம்பரிய விவசாயம், வயல் வரப்புகளில் மரங்கள் நடவு செய்து விவசாய காடுகள் உருவாக்குதல், கால்நடைவளர்ப்பு, தேனீ வளர்ப்பு, உணவு பதப்படுத்துதல் ஆகியவற்றை ஊக்குவித்தல் என்பவைகள் ஆகும். இந்த 3 தூண்களும், விவசாயத்தில் உள்ள ஆபத்துக்களை குறைத்து, வருமானத்தை அதிகரிக்கும். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான யுக்திகளானது, விவசாய உற்பத்தியை கணிசமாக உயர்த்துதல், உயர்மதிப்பு விவசாயம் மூலமாக பன்முகப்படுத்தப்பட்ட உற்பத்தியை உருவாக்குதல், பெரும்பாலான விவசாய வேலைவாய்ப்புகளை, விவசாயம் சாரா வேலைகளுகளாக மாற்றுதல் ஆகியவைகள் ஆகும். மேலும், நபார்டின் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், கன்னியாகுமாரியில் ரூ.81.79 கோடி மதிப்பிலான 110 திட்டங்கள் அதாவது பள்ளிக்கூடங்கள் - 18.94 கோடி, சாலை மற்றும் பாலங்கள் - 22.02 கோடி, சேமிப்பு குடோன்கள் - 1.29 கோடி, கால்நடை மருந்தகங்கள் - 0.84 கோடி, பால் பண்ணை - 2.20 கோடி மற்றும் நீர்ப்பாசனம் - 11.09 கோடி மதிப்பிலான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.ஹெட்சி லீமா அமலினி, நாகர்கோவில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் திரு. எஸ்.முருகன், பாரத ரிசர்வ் வங்கியின் உதவி பொது மேலாளர் திரு. எ.ராம் குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.எஸ்.விஸ்வநாதன் மற்றும் வங்கிகளின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.